**சிறப்பு சார்பு நீதிமன்றம் , திண்டுக்கல்**

**M.C.O.P.No.862/2024**

**தேதி:– 04.08.2026 ம.சா.2**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: வீரமணி** | **தொழில்** | **:** |
| **தந்தை/ கணவர் பெயர்** | **:** | **கிராமம்** | **:** |
| **வயது** | **:** | **தாலுகா/மாவட்டம்** | **:** |

சாட்சி முன்னிலை. சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மனுவின் மனுதாரர் தரப்பு சாட்சி. முதல் விசாரணைக்கான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதிலுள்ள விபரங்களை படித்து பார்த்து சரியென ஒப்புக் கொண்டு கையொப்பம் செய்துள்ளேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் வீடு வேடசந்தூர் வ.ஊ.சி நகரில் உள்ளது. சாட்சி பின்னிட்டு தகப்பனார் வீடு வ.ஊசி நகரில் இருப்பாகவும் விபத்து சமயத்தில் அங்கியிருந்ததாகவும் கூறினார். விபத்தில் இறந்தவர் எனக்கு தாத்தா உறவு முறை ஆகும். விபத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என் தந்தையிடம்விபரம் சொன்னேன் அவர் புகார் கொடுத்தார். விபத்து நடந்தபோது நான் அந்த இடத்தில் இருந்தேன். விபத்தை நேரடியாக பார்த்தேன். விபத்தானது அய்யப்பா நகரில் நடைபெற்றது என்றால் சரிதான். விபத்து நடந்த போது நான் வீட்டில் இருந்தேன் என்றும் அய்யப்பா நகரில் நடந்த விபத்து குறித்து நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் என் தாத்தா சாலையை கடந்தபோது விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் என் தாத்தா சாலையை கடக்கவில்லை சாலையை கடப்பதற்காக நின்று கொண்டிருந்தார். என் தாத்தாவை என் தகப்பனார் கவனித்து வந்தார்ள ன்றால் இல்லை. அவர் தனியாக தான் வசித்து வந்தார். நான் விபத்தை நேரடியாக பாக்கவில்லை என்றும் இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வேடசந்தூர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. காவல்துறையினர் என்னை விபத்துநடந்த அன்றே விசாரித்தார்கள்.

**மறு விசாரணை – இல்லை**

S SOMASUNDARAM Digitally signed by S SOMASUNDARAM